பதிவு எண்: M 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆவணி 27உ (12—9—67) செவ்வாய் ★ வெளியூர்: ஆவணி 28 (13—9—67) புதன் [இதழ்: 75

'தி.மு.க. ஆட்சி 25 ஆண்டு நீடிக்கும்'

டாக்டர் ஏ. இராமசாமி மதிப்பீடு

கடலூர், செப். 9—

"மற்ற மாநிலங்களில்லாத அளவுக்குத் தமிழகத்தில்தான் நிலையான ஆட்சி ஏற்பட்டுள்ளது. தி. மு. க. ஆட்சி குறைந்தது 25 ஆண்டுகளுக்காவது நீடிக்கும்."

என்று டாக்டர் ஏ. இராமசாமி (முதலியார்) கருத்தறிவித்தார். சி. கந்தசாமி முதலியார் மகளிர் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடக் கால்கோள் விழாவுக்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது;—

"இனி நாம், 'ஆளும் கட்சி' என்று கூறக்கூடாது; 'உழைக்கும் கட்சி' என்றே கூறவேண்டும்.

"நம் பண்பைத் தமிழ் மரபைக் காப்பாற்றத் தமிழும், அறிவியல் தொழில்நுட்பத்தை அறிய ஆங்கிலமும் நமக்குத் தேவை.

"நான் தமிழ் படிக்கவில்லை; தெலுங்கும் ஆங்கிலமும்தான் படிக்க வாய்ப்புக் கிடைத்தது. நம் தமிழ் மக்களுக்குத் தாய் மொழியான தமிழும், வெளியுலகத் தொடர்புக்கு ஆங்கிலமும் போதும்.

தமிழுக்கும் — ஆங்கிலத்துக்கும் இடையே வேற்றுமையோ, போட்டியோ இருக்க இடமில்லை. இந்த இரு மொழிகளையும் நாம் நன்ருகக் கற்றுக்கொள்ள வேண்டும். ஆங்கிலத்தை தமிழ் நாட்டில் கட்டாயக் கல்வியாக்க வேண்டும்."

சங்கமம்!

"ஆறு மாத விரதத்தை முடித்துக்கொண்டு, திக்குக்கு ஒருவராக — சூருவளிப் பயணம் அல்ல; சூருவளியில் அடித்துச் செல்லப்பட்டதால்—பல ஊர்களைப் பார்த்துவரும் பக்தவத்சலமும் காமராசரும், மதுரையம்பதியில் ஒதுங்கினுர்கள் - ஒன்று கூடினுர்கள்" என்று, 12—9—67 அன்று வந்துள்ள நாளிதழ்த் தகவல்களின்படித் தெரியவருகிறது.

தமிழ் நாடு காங்கிரசின் ஆதரவில் நடத்த இருக்கும் காந்தியடிகள் நூற்ருண்டு விழாக் கொண்டாட்டத்தின் சென்னை மாவட்ட வரவேற்பாளராகப் பக்தவத்சலத்தை நியமிக்கும்படி கோரிவிட்டு, பழையபடியும் காமராசர் சூருவளிப் பயணத்தில் சிக்கினுர் என்று கூறப்படுகிறது.

—'பாக்சர்'

பாக்சர்!

நமது இதழுக்கு மேற்கொண்டு அறிமுகமாகும் ஒரு புதிய மனிதர்!

பெயரை அப்படியே தமிழில் மொழிபெயர்த்துவிட வேண்டாம்; அந்தப் 'பாக்சர்' வேறு—இந்தப் 'பாக்சர்' வேறு!

இவர், பத்திரிகைத்துறையின் 'பாக்சர்'!

கட்டங்கள் போட்டு 'பெட்டி'க்குள் வருகின்றன அல்லவா சில செய்திகள்—அதற்கு, 'பாக்ஸ் மேட்டர்' என்பார்கள், பத்திரிகைத் துறையிலிருப்பவர்கள்!

அத்தகைய செய்திகளைத் தருவதால், நம்மவருக்கு, 'பாக்சர்' என்று பெயர் வைத்துள்ளோம்! 'குத்துச் சண்டை விரரோ' எனக் குழம்பிவிட வேண்டாம்.

'சுடச்சுட' என்ற தலைப்பில் அவ்வப்போது 'தட்ப'மாகவும், 'வெப்ப'மாகவும் சில சொல்லுவார்கள்; எனவே, குளிரும் இருக்கும்—கொதிப்பும் தென்படும்!

'திருவாளர் சந்தேகம்' போல செய்தி உலகில் மட்டுமே சஞ்சரிக்கும் 'காரக்டர்'களில், இவரும் ஒரு பிறவி!

இதே இதழில் வேருேர் இடத்தில், இன்று, ஒரு 'சாம்பி'ளுடன் தனது 'வேலை'யினைத் துவக்குகிருர்!

எல்லையோரத்தில் புதிய அந்நிய ஆக்கிரமிப்பு

தலைநகரோ மொழித் திணிப்பில் சுறுசுறுப்பு

சிக்கிம் பகுதியில் சீனர்கள் இந்தியப் படைமீது தாக்குதல்

புதுடில்லியில் 'இந்திக் கொள்கை'யைத் தீவிரமாக்கத் திட்டம்!

'நம் நாடு' செய்தி நோக்கு

★ தாக்குதல்களை நிகழ்த்த தட்ப வெப்ப நிலைப்படி இது தக்க தருணமென்பதால், சிக்கிம் பகுதிக்கு அருகிலுள்ள நாதுலாவிலிருந்து செஞ்சீனப் படைகள் இந்தியத் துருப்புகளை நோக்கி நேற்று சுட்டிருக்கின்றன!

★ அண்மையில் நடந்துள்ள ஒன்றிரண்டு விரசமான சம்பவங்களையும் கருத்தில் கொள்ளாது—சூழ்நிலைகளையும் புறக்கணிக்கும் போக்கில்—மத்திய அரசு, தனது இந்தி மொழிக் கொள்கையில் தொடர்ந்து தீவிரம் காட்டுகிறது என்ற அறிகுறிகளும் நேற்று இந்தியத் தலைநகரில் தோன்றியிருக்கிறது!

★ 'மிஷின் கன்'களையும், 76 எம். எம். துப்பாக்கிகளையும், கனரகப் பீரங்கிகளையும் கொண்டு இந்தியப் படைகள்மீது சீனர்கள் தொடர்ந்து சுட்டு வருவதால் நமது இராணுவ வீரர்கள் பலர் உயிர்ச்சேதமடைந்திருக்கின்றனர்!

★ 'பயிற்சி மொழி பற்றிய இந்திய அரசின் கொள்கை, சாத்தியக் கூறுகளற்றதாக இருக்கிறது' என்பதனைச் சுட்டிக்காட்டி வெளியேறிய சாக்ளாவின் பதவி விலகல் கொடுத்திருக்கும் விளைவுகளை உணராத நிலையில், நேற்று புதுடில்லியில் துவங்கியிருக்கும் பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் மாநாட்டில் இந்திராவும், திரிகுண சென்னும் 'கல்வித் துறையில் கட்டாய இந்தி' — 'இந்தியாவின் இணைப்பு மொழியாக ஆங்கிலத்துக்குப் பதில் இந்தி'—'இந்தி மொழியில் எல்லாத் துறைகளும் என்பதற்கு ஒரு காலக் கட்டம்' என்பன போன்ற அறிவிப்புக்களைத் திட்டவட்டமாகத் தந்திருக்கின்றனர்!

★ போர் நிறுத்த ஒப்பந்தத்தை அறிவித்தும்—கூடிப் பேச விருப்பம் தெரிவித்தும்—குறிப்பு ஒன்றினை, இந்திய அரசு, சீனத் தூதுவரகத்துக்கு அனுப்பியிருக்கிறது!

★ 'இந்தி மட்டுமே என்ற கொள்கை கூடாது'—'அதிலும், இத்தனை அவசரம் வேண்டாம்'—'இந்தியை அறிமுகப்படுத்த ஒரு காலக் கட்டமும் தேவையில்லை' என்றெல்லாம் மொழித் துறைக்கு அப்பாற்பட்டு அறிவுரை தந்த துணைவேந்தர்களின் கருத்துக்களை, இந்திராவோ, திரிகுண சென்னே நேற்றையக் கூட்டத்தில் ஏற்றுக்கொண்ட அறிகுறி தென்படவில்லை!

தமிழில் பெயர்ப்பலகை

அமைச்சர் நெடுஞ்செழியன் வற்புறுத்தல்

சென்னை, செப். 11—

"தெருக்களின் பெயர்களையும், வணிக நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளையும் தமிழில் எழுதுமாறு செய்ய தமிழ்ப் புலவர்கள் பிரசாரம் செய்ய வேண்டும்"

என்று, கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன், வற்புறுத்தினுர்.

இன்று மாலை மயிலை இராஜேசுவரி திருமண மண்டபத்தில் நடந்த பாரதி விழாவில் அமைச்சர் பேசுகையில், 'பாரதி விழாக் கொண்டாடும் இசைவாணர்களைக் கொண்டு பாரதி பாடல்களைப் பாடச் செய்து பாரதியின் பாடல்களை மக்களிடையே பரப்பவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

இதுவரை

ரூ. 25,00,274

சென்னை, செப். 11—

சென்னை நகரில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காகத் தமிழக முதலமைச்சர் திரட்டி வரும் நிதிக்கு செப்டம்பர் 8-ம் நாள் வந்த தொகை ரூ. 6,548.00.

இத்தொகையுடன் மொத்தம ரூ. 25,00,274.92 சேர்ந்துள்ளது.

வாழ்க்கைச் செலவு குறைகிறது

சென்னை நகரில் தொழிலாளர் பிரிவினருக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி, செப்டம்பர் 2-ம் நாளுடன் முடிந்த வாரத்தில் இரண்டு புள்ளிகள் குறைந்து 693-ல் நின்றது.

காய்கறி, மிளகாய், இறைச்சி, புளி, நல்லெண்ணெய் ஆகியவற்றின் விலை இறக்கமே இதற்குக் காரணம்.

"கிராமம்தான் ஜீவன்; கிராமம்தான் நாட்டின் ஜீவநாடி; கிராமங்களில் கேடு விளையவிட்டு வேறெங்காவது போவேனு?" என்று கேட்டுவிட்டு, 'அடுத்த முறை முழுக்க முழுக்கக் கிராமப் புறங்களில்தான் பிரயாணம் பண்ணப் போறேன்னேன்' என்று பேசியிருக்கிருர் காமராசர்!

அதைச் சேலத்தில் சொல்லியிருக்க வேண்டாம்—சேலத்தின் கிராமம் ஏதாவது ஒன்றில் இப்படிப் பேசியிருக்கலாம்!

இருந்தாலென்ன? டில்லிப் பட்டணத்திலேயே இருந்து வந்தவருக்கு, கிராமத்தின் மீது மோகம் பிறந்திருக்கிறது—இருக்காதா?

தலைவர் — பெரியவர்—கர்ம விரர் — என்று ஏதேதோ சொல்லி அவரைக் கூப்பிடுகிருர்கள்; அதாவது அழைக்கிருர்கள்!

இந்தச் செய்தியைப் படித்தவுடன், என் மனது கேட்கவில்லை! யார் கோபித்தாலும் கோபிக்கட்டும்!

நான் இனி அவரை,

'கிராம'ராஜர்

என்றுதான்

சொல்லப் போகிறேன்!

நம் நாடு
ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.லிட்.

திருவள்ளுவராண்டு 1998 ஆவணி 27 (12—9—67) செவ்வாய்

மாதவன் சந்தேகம் உறுதியாகிறது!

புதுடில்லியில் நடைபெற்ற சட்ட அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொண்ட தமிழகச் சட்ட அமைச்சர் மாதவன் அவர்களை, மீனம்பாக்கம் விமான நிலையத்தில் ஆயிரக்கணக்கில் மாணவர்கள் மிக்க ஆர்வத்துடன் வரவேற்றனர். பின்னர் செய்தியாளர்கள், அமைச்சரைச் சந்தித்து, சட்ட அமைச்சர்கள் மாநாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பற்றிய கேள்விகளை எழுப்பினர். அவர்கள் எழுப்பிய கேள்விகளில், ஆங்கில மொழி நீடிப்பது குறித்து இந்தி பேசாத பகுதி மக்களுக்கு நேரு கொடுத்துள்ள வாக்குறுதியைச் சட்டமாக்குவது பற்றிய கேள்வியும் ஒன்றாகும்.

அக்கேள்விக்கு, அமைச்சர் மாதவன் அவர்கள் கூறியுள்ள பதில் சிந்தனைக்குரியதாகும் என்பதுடன், இந்திய அரசாங்கத்திலிருக்கின்ற இந்தியாளர்களின் உள்ளத்தை வெளிப்படுத்துவதாகவும் அமைந்திருக்கிறது.

"இது எத்தனை ஆண்டுகளாகச் சொல்லப்பட்டு வருகிறது என்பதை நாடறியும். 'காலக் கெடு', 'துணை மொழி அந்தஸ்து' என்ற சமாதானம் எல்லாம் வெறும் ஏமாற்று வேலைதான் என்பதை அங்குள்ள நிலைமைகளைப் பார்த்தபோது தெரிந்துகொண்டேன்.

"மொரார்ஜி பேசியது நமக்கு வெறித்தனமாகப் பட்டாலும், இந்திக்காரர்கள் அதைத்தான் விரும்புகிறார்கள்; அங்குள்ள நிலை அதுதான். மற்ற மத்திய அமைச்சர்கள் நமக்குச் சமாதானம் கூறும் வகையில் பேசுவது வெறும் ஏமாற்று வேலைதான்; கண்துடைப்புத்தான் என்பதைத் தெரிந்துகொண்டேன்."

இந்திய அரசின் ஆட்சி மொழி இந்தி மட்டுமேதான் என்ற நிலை ஏற்பட்டுவிடுமானால் இந்தி பேசாத பகுதிகளைச் சேர்ந்த மக்களின் எதிர்கால நலன் கேடடையும் என்றும், இந்தி பேசாத பகுதி மக்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக ஆக்கப்பட்டுவிடுவர் என்றும் இந்தி பேசாத பகுதி மக்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

இந்தி மொழி திணிக்கப்படுவதற்கு எதிராக மேற்படி அச்சத்தைத் தெரிவித்த இந்தி பேசாத பகுதிகளில், தமிழகம் முன்னணியில் இருந்தது. இப்பொழுதும் இருந்துவருகிறது—இனியும் இருந்து வரும்.

இந்தி பேசாத பகுதி மக்களினுடைய்வும் அதிலும் குறிப்பாக தமிழ் மக்களுடையவும் எதிர்ப்புணர்வையும் அச்சத்தையும் உண், அவ்வச்சத்திலிருக்கின்ற நியாயத்தைப் புரிந்துகொண்டு, 'அவ்வச்சத்தைப் போக்கி நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்' எனத் தீர்மானித்துக் கொண்டார்.

தாம் செய்த அத்தீர்மானத்தையொட்டி, 'இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்புகின்றவரை ஆங்கில மொழியும் இந்தி மொழியுடன் இணை ஆட்சி மொழியாக இருந்துவரும்' என வாக்குறுதி அளித்தார்.

தாம் தந்த அவ்வாக்குறுதியை நிறைவேற்றத் தம் காலத்திலேயே, அரசியல் சட்டத்தில் உரிய திருத்தத்தைச் செய்துவிட்டிருக்க வேண்டும் பண்டித நேரு அவர்கள்; அப்படி. அவர் செய்துவிட்டிருக்கும்பட்சத்தில், இப்பொழுது நிகழ்ந்துகொண்டிருக்கின்ற மொழியைப் பற்றிய சர்ச்சைகள் நிகழ்வதற்கே வாய்ப்பில்லாமல் போயிருக்கும்.

கொடுத்த வாக்குறுதிக்குச் சட்ட உருவம் கொடுக்காமலே பண்டிதர் மறைந்துவிட்டார். அவருக்குப் பிறகு தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்ட லால்பகதூர் சாஸ்திரியார் அவர்களும், காலஞ்சென்றவர் தந்த வாக்குறுதியை நினைவுறுத்திக் கொண்டிருந்தாரே அல்லாது, அவ்வாக்குறுதிக்குச் சட்ட வடிவம் கொடுக்க முனைந்தாரில்லை. வாக்குறுதியை நினைவு கூறிக்கொண்டிருக்கின்ற நிலையிலேயே, சாஸ்திரி அவர்களும் எதிர்பாராவகையில் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார்.

அவர் மறைந்ததற்குப் பின்னர் தலைமை அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டிருக்கின்ற இந்திரா காந்தியாரும், மேற்குறித்த வாக்குறுதியை, வாக்குறுதி அளவிலேயே விட்டுவைத்திருக்கின்றார். அவ்வாக்குறுதிக்கு எப்பொழுது சட்ட உருவம் கொடுக்க இந்திரா காந்தியார் தீர்மானித்திருக்கின்றார் என்பதற்கு, சரியான விடை கிடைத்திடவில்லை.

இது பற்றி தலைமை அமைச்சர் கூறுகின்ற கருத்திலும், அக்கருத்தில் இடம்பெறுகின்ற சொற்களும்—சட்டம் இயற்றப்படும் பட்சத்தில்—அவ்வாறு இயற்றப்படக்கூடிய சட்டம், நேருவின் உறுதிமொழியை முழு அளவில் உள்ளடக்கமாகக் கொண்டிருக்குமா என்பதை உறுதிப்படுத்துவதாக இல்லை.

'இந்தியுடன் ஆங்கிலமும் இணை ஆட்சிமொழியாக இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்புகின்றவரை நீடித்திருக்கும்' என்ற உறுதிமொழியை, இந்தியாளர்களின் தாக்குதலிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள விழைந்த இந்தி பேசாத பகுதி மக்களுக்கே பண்டித நேரு கொடுத்தார். அந்த வாக்குறுதிப்படி, இந்தி பேசாத பகுதி மக்களுக்கு நம்பிக்கை ஏற்படத்தக்கவகையில் சட்டமியற்றுவதைத்தான், இந்திய அரசாங்கம் அடிப்படை நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

ஆனால் இன்றைய இந்திய அரசாங்கமோ, அந்த அடிப்படை நோக்கத்தை ஏறெடுத்துப் பாாக்கயும் தயாராக இல்லை. நேரு கொடுத்த வாக்குறுதியைச் சட்டமாக்குவதுபற்றி, இந்திய அரசைச் சேர்ந்த ஒவ்வொரு அமைச்சரும் வெவ்வேறு கருத்தை வெளியிட்டு வருகின்றனர். இவ்வாறு வெளியிடப்படுகின்ற கருத்துக்கள், நேரு அளித்த வாக்குறுதியின் உள்ளடக்கத்தை உருக்குலைத்து விடுவதாகவும் உள்ளன.

டில்லிப்பக்கத்தில்வீசும் நச்சுக்காற்று!

விந்தியத்தைத் தாண்டி தமிழகத்தில் நுழையவிடோம்!

நல்லதை ஏற்க மறுக்கும் 'நாட்டின் நாயகர்'களுக்கு அண்ணா இடித்துரை

கடலூர், செப். 9—

"டில்லிப் பக்கத்தில் மொழிப் பிரச்சினையில் நச்சுக் காற்று வீசிக்கொண்டிருக்கிறது! ஆனால், அந்தக் காற்று விந்தியத்தைத் தாண்டித் தமிழகத்திற்கு வந்துவிட முடியாது! நமது பயிற்சியும் பண்பாடும் அந்த நச்சுக் காற்றைத் தமிழகத்திற்குள் நுழையவிடா"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், இங்கு பச்சையப்பா அறநிலையத்தின் சார்பில் இயங்கும் சி. கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி கட்டிடக் கால்கோள் விழாவில் பேசுகையில் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"திணிப்பது எதுவாயிருந்தாலும் அது வெளியே வந்துவிடும். விரும்பாததைக் கொடுத்தால் குழந்தைகூட அதைத் துப்பிவிடும். அப்படித் துப்பிவிட்டதை எடுத்து மீண்டும் வாயில் திணிப்பதைப்போல், தமிழகம், 'இந்தி வேண்டாம்' என்று கூறிவிட்ட பிறகும் இந்தியை இங்கே திணிகக விரும்புகிறார்கள்!

தமிழகத்திற்குத் தமிழ் போதும்; இந்தியத் தொடர்புக்கும் அனைத்துலகத் தொடர்புக்கும் ஆங்கிலம் போதும். ஆங்கிலத்தை வைத்துக்கொண்டே தமிழன் உலக அரங்கில் தலை நிமிர்ந்து வாழ முடியும்.

"இரு மொழிக் கொள்கைதான் தமிழக அரசின் கொள்கை" என டில்லி சென்ற நமது அமைச்சர்கள் திட்டவட்டமாக அறிவித்து வந்திருக்கிறார்கள்.

தாய்பூனை நுழைய ஓர் ஓட்டை—குட்டிப் பூனை நுழைய ஓர் ஓட்டை — என்று அமைப்பது போல், அனைத்துலகத் தொடர்புக்கு ஆங்கிலமும், இந்தியத் தொடர்புக்கு இந்தியும் இருக்க வேண்டும் என்பது வேடிக்கையாக இருக்கிறது.

வரலாறு, இலக்கியம் போன்ற துறைகளில்தான் உடனடியாக விரைந்து தமிழ் பயன்படுத்தப்படும்; மருத்துவம், பொறியியல், கணிதம் போன்ற தொழில் நுட்பத் துறைகளில் மெல்ல மெல்லத்தான் தமிழைப் பயன்படுத்த முடியும்; அதுவரை ஆங்கிலம் தொடர்ந்து இருக்கும். ஆங்கிலத்தின் உதவியுடன் தமிழை அத்துறைகளில் வளர்க்க வேண்டும். அதன் பிறகு அறிவியல் பாட மொழியாக்க வேண்டும்.

"ஆங்கிலம்தான் பயிற்று மொழியாக இருக்கவேண்டும் என்ற கொள்கைக்காகப் பதவியைத் துறந்த சக்ளாவைப் பாராட்டுகிறேன். இதிலிருந்து தெரிவது நல்லதைச் சொல்பவர்கட்கு டில்லி அரசில் இடமில்லை என்பதுதான்."

மொரார்ஜியின் போக்கால் தமிழக மாணவர்களின் கொதிப்பு

அண்ணா அறிவுரையினால்தான் நிலைமை கட்டுக்கடங்கியுள்ளது

வடநாட்டு இந்தி வெறியர்கள் உண்மை உணருவரா?

"தங்களைப் பாதிக்கும் முக்கியப் பிரச்சினைகளிலும் மத்திய அரசிடமிருந்து சலுகைகளையும் உரிமைகளையும் பெற வேண்டிய நேரங்களிலும், தென் மாநிலங்கள் ஒரே குரலில் பேசாமல் தனித் தனியாகவே போராடுகின்றன என்பதையும், அதே நேரத்தில் வடக்கிலுள்ள மாநிலங்கள் — தங்களிடையே எவ்வளவு பிளவுகள் இருந்தாலும், தங்கள் அரசுகள் எவ்வளவு நிலையற்றவையாக இருந்தாலும்—அவ்வளவு தென்னிந்தியர்களையும் பொறுமையுடன் நோக்குவதையும், இந்தியை ஒரே மத்திய ஆட்சி மொழியாக ஆக்கினாலொழிய அறிவுத் தகுதியில் வட இந்தியர்களைவிட உயர்ந்த நிலையிலுள்ள தென்னிந்தியர்களைத் தங்களால் மட்டந்தட்ட முடியாது என்று அவர்கள் கருதுவதையும் மொரார்ஜி தேசாய் கணக்கில் எடுத்துக் கொண்டுள்ளார்.

"தமிழகத்திலுள்ள காங்கிரசல்லாத அரசு, இந்தி வெறியை எதிர்த்துத் தன்னந்தனியாகப் போராடுவதுபோலத் தோன்றினாலும், அது மிகுந்த கடமையுணர்ச்சியுடனும், தெளிவுடனும் தனது வாதங்களை எடுத்துரைத்து வருகிறது. 'ஆங்கிலம் மட்டும்தான் இணைப்பு மொழியாக இருக்கவேண்டும்' என்று அது, இந்தி பேசாத அத்தனை மாநிலங்களின் சார்பிலும் போராடி வருகிறது. தான் கொணர விரும்பும் மாற்றங்க

(3-ம் பக்கம் பார்க்க)

இந்தியைக் கட்டாயமாக்க முடியாது

கல்வியமைச்சர் திட்டவட்ட அறிவிப்பு

கடலூர், செப். 9—

"தமிழகத்தில் தமிழ், ஆங்கிலம் தவிர மற்றும் 13 இந்திய மொழிகளையும் கற்றுக்கொடுக்க ஏற்பாடாகியிருக்கிறது. அவற்றில் யார் எதை வேண்டுமானாலும் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்யலாம்; ஆனால் இந்தி மொழியைக் கட்டாய மொழியாக்குவது என்பது மட்டும் இயலாது"

என்று கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் இங்கு திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

சி. கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி கட்டிடக் கால்கோள் விழாவில் அமைச்சர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"உத்தரப் பிரதேசத்தில் வாழ விருப்பமுடையவர் அல்லது அங்கு சென்று தொழில் தொடர்பு வைத்துக்கொள்ள விரும்புபவர் வேண்டுமானால் இந்தியைப் படித்துக்கொள்ளட்டும்; அதற்குத் தடை எதுவுமில்லை."

"முதல் வகுப்பிலிருந்து தமிழும், மூன்றும் வகுப்பிலிருந்து ஆங்கிலமும், ஒன்பதாம் வகுப்பிலிருந்து இந்திய மொழிகளில் ஒன்றும் கற்றுக்கொடுக்கப்படும். தமிழும் ஆங்கிலமும் கட்டாயம் பள்ளிகளில் இருக்கும்."

தி.மு.க. ஆட்சி ஏற்பட்ட பின்!

"தி.மு.க. ஆட்சி ஏற்பட்ட பின், 9 புதிய கல்லூரிகள் திறக்கப்பட்டன; அவற்றில் இரண்டு அரசினராலும், 7 தனியார் துறையாலும் நிறுவப்பட்டன.

"கல்லூரிகளில் இட நெருக்கடியைத் தவிர்க்க 7,000 புதிய இடங்கள் உருவாக்கப்பட்டன.

"கல்விக்காக இப்போது ரூ. 54 கோடி ஒதுக்கியுள்ளோம்; இது தவிர உள்ளாட்சி மன்றங்கள் மூலம் ரூ. 4 கோடி செலவிடப்படும்".

"உத்தேச ஆட்சிமொழி திருத்த மசோதா, நாட்டிலுள்ள எல்லா மக்களின் நலன்களையும் பாதுகாப்பளிப்பதாயிருக்கும்."

இக்கருத்தைக் கூறியிருப்பவர், நாடாளுமன்ற விவகார அமைச்சராக இருந்துவரும் டாக்டர் ராம் சுபாக் சிங் அவர்களாவார்.

"இந்தி மொழியுடன் ஆங்கில மொழியும் இணை ஆட்சி மொழியாக இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்புகின்றவரை நீடித்திருந்துவரும்."

இது, காலஞ்சென்ற பண்டித நேரு தந்த வாக்குறுதி; ஆனால் அவர் தந்த வாக்குறுதியின் பெயரால் இந்திய அரசாங்கம் கொண்டுவரத் தீர்மானித்திருக்கின்ற மசோதாவோ, முற்றிலும் மாறாக இருக்கக்கூடிய மசோதாவாகும்.

இம்மசோதா குறித்துத் தமிழக சட்ட அமைச்சர் வெளியிட்டிருக்கின்ற சந்தேகம், உண்மையிலும் உண்மை என்பதைத் தமிழக மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

—கா. க.

இந்தியைத் திணித்தால் புரட்சி மூளும்!

நம்பூதிரிபாடு எச்சரிக்கை

சென்னை, செப். 10—

"இந்தியை விரும்பாத மாநிலங்களில் இந்தியைத் திணிக்க முனைந்தால, மக்கள் புரட்சி மூளும்"

என்று கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு கருத்தறிவித்தார்.

மொழிப் பிரச்சினை குறித்து அவர் மேலும் கூறியதாவது:—

"இந்தி அல்லாத மொழிகள் பயிற்று மொழிகளாவதற்கு மத்திய அரசு உதவ வேண்டும். இந்தி பேசாத மாநிலங்கள் விரும்பும்வரை ஆங்கிலம் நீடிக்க வேண்டும். ஆங்கிலத்திலிருந்து இந்திக்கு அல்லது வட்டார மொழிகளுக்கு மாற்றம் ஏற்பட இது உதவும்.

"ஆங்கிலம் அகற்றப்படுவதற்குக் காலவரம்பு விதிப்பதை நான் விரும்பவில்லை. ஆங்கிலத்திலிருந்து வட்டார மொழிகளுக்கு விரைவாக மாற்றம் ஏற்பட வேண்டும்."

தமிழகமும் வங்கமும் கொதித்தெழும்

இந்தி வெறியர்கட்கு எச்சரிக்கை

'மித்திரன்' இதழில் அதன் டில்லி அரசியல் நிருபர் எழுதியிருக்கும் கட்டுரையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது :—

சென்ற வார இறுதியில் காங்கிரசுக் கமிட்டி இரண்டு நாள் ஆலோசனை நடத்தி பல பிரச்சினைகளைப் பற்றி தீவிரமாக விவாதித்தது. வழக்கம்போல அபிப்பிராயங்களும் தீர்மானங்களும் வெளிவந்தன.

மொழிப் பிரச்சினைக்குள்ள ஒரே தீர்வு 1965-ம் வருஷத்தில் சொன்னதுதான். அதை அரசாங்கம் உடனடியாக நிறைவேற்றியாக வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது—அதாவது, 'இந்தியோடு ஆங்கிலமும் ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும்; இது பற்றிய நேருவின் உறுதிமொழியைச் சட்டமாக்க வேண்டும்' என்பது!

காங்கிரசுப் பெருந் தலைகள் இந்த அபூர்வமான முடிவை இப்போது கண்டுபிடித்துக் கூறியதற்காக நாடு மிகவும் கடமைப்பட்டிருக்கிறது,

அடுத்த தடவை கூடும்போது இதே முடிவை மீண்டும் வற்புறுத்துவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

ஏனென்றால், 'காங்கிரசுக் கமிட்டி சொல்கிறதே' என்று ஒரு காரியமும் நடப்பதில்லை! இப்போது கமிட்டியில் அங்கம் வகிக்கும் பெருந் தலைவர்களில் பலர் சென்ற தேர்தலில் தோற்றுப் போய் செல்லாக் காசாகிவிட்டவர்கள்!

இந்திரா, மொரார்ஜி இவர்கள் கமிட்டியில் அங்கம் வகித்தாலும், அவரவர் போக்குப்படிதான் செயல்படுவார்களேயன்றி, 'காரியக் கமிட்டி சொல்லிவிட்டது' என்பதற்காக அக்கறையுடன் அதை நிறைவேற்றுபவர்கள் அல்லர்!

மேலும் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பார்லிமெண்ட் கட்சியின் ஆதரவைப் பொறுத்தே நடத்தப்படும். நேருவுக்குப்பின் பார்லிமெண்ட் காங்கிரசுக் கட்சி படிப்படியாகத் தன் செல்வாக்கை நிலைநாட்டுவதில் தீவிரம் காட்டி வருகிறது. காரியக் கமிட்டியோ அல்லது அகில இந்தியக் காங்கிரசுக் கமிட்டியோ, 'இப்படிச் செய்—அப்படிச் செய்' என்று உத்தரவு போடுவதை பார்லிமெண்ட் கட்சியினர் விரும்புவதில்லை!

'ராஜ மானியத்தை ரத்து செய்' என்று சமீபத்தில் அ. இ. கா. க. ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. அதோடு, பாங்கிகளின் மீது சமூகக் கட்டுப்பாடு—பொது இன்ஷ்யூரன்சை தேசியமயமாக்குதல் போன்ற பத்து அம்சத் தீர்மானத்தையும் அமுலாக்க வேண்டும் என்று உத்தரவு பேட்டது. அது என்ன ஆயிற்று? அப்படியே அந்தரத்தில் விடப்பட்டுவிட்டது! பெருந் தலைகளுக்குள் இதுபற்றி தீவிர அபிப்பிராய பேதங்கள்—எந்த உருப்படியான தீர்மானத்தையும் அமுலாக்குவதற்குத் தடையாக நிற்கின்றன!

மொழிப் பிரச்சினையைப் பற்றி காரியக் கமிட்டியின் சிபாரிசு உன்னதமானது; ஆனால், 1965-ம் ஆண்டைவிட இப்போது அதை அமுலாக்குவதற்குத் தடை அதிகரித்துவிட்டது! மொரார்ஜி போன்ற பொறுப்பான மந்திரிகளேஒருதலைப்பட்சமாகப் பேசுகிறார்கள்!

"சென்னை ராஜ்யம் ஒன்றுதானே இந்தி வேண்டாம் என்று மூர்க்கமாக இருக்கிறது. மற்ற ராஜ்யங்கள் அதை ஏற்கும்போது, இந்தியை சென்னை ராஜ்யமும் கட்டாயமாக ஏற்கத்தான் வேண்டும்" என்று மொரார்ஜி நினைக்கிறார்.

இப்போது திரைக்குப்பின் நடந்து வரும் ஆட்சித் தலைமைப் போட்டியில் யதார்த்தமான நடுநிலைக் கொள்கைக்கே இடமில்லை. 'இந்தியை ஆதரித்தால் அதிகபட்ச ஆதரவு இருக்குமே' என்ற வகையில்தான் தனித் தலைவர்களின் கொள்கை இருக்கிறது. மேலும் சென்னையின எதிர்ப்பினால் நஷ்டம் ஒன்றுமில்லை. பார்லிமெண்டில் இரண்டு சபையையும் சேர்த்து ஏழெட்டுக் காங்கிரசுக் கட்சி அங்கத்தினர்கள்தாமே சென்னையைச் சேர்ந்தவர்கள்? இந்நிலையில், காங்கிரசுக் கமிட்டி மொழி பற்றி ஒரு சமரசக் கொள்கையை வற்புறுத்துவதற்கு ஒரே காரணம், காமராஜ், சுப்பிரமணியம் இருவரும், 'அதைத் தவிர வேறு வழியில்லை என்று அடித்துப் பேசியதுதான்!

அதிர்ஷ்டவசமாக பிரதமர் இந்திராவும் இக்கொள்கையை ஆதரித்துப் பேசியுள்ளார். சென்னையில் அவருக்கு மாணவர்களால் தரப்பட்ட சூடும், அதைத் தொடர்ந்து அண்ணாதுரையின் திட்டவட்டமான பிரகடனமுமே காங்கிரசுத் தலைமை, நேருவின் உறுதிமொழியைக் காற்றில விடாமல் மீண்டும் சிபாரிசு செய்திருப்பதற்குக் காரணங்களாகும்!

வரும் இரண்டு மாதங்களில் நிகழவிருக்கும் சம்பவங்கள், இந்நாட்டின் தலைவிதியையே மாற்றியமைப்பதாக இருக்கலாம்.

மொழிப் பிரச்சினையில் இந்தி வெற்றி பெறுமானால் சென்னை ராஜ்யமும் அதைத் தொடர்ந்து வங்காளமும் கொதித்துப் பொங்கலாம்.

கரூர் நகர தி.மு.க.

9—9—67-ல் கரூர் நகர தி.மு.க, உட்கிளைச் செயலாளர்கள்—பிரதிநிதிகள் கூட்டம், தோழர் ப. சத்திவேல் தலைமையில் நடைபெற்றபோது, நகரக் கழகப் பொருளாளர் இரா. வைரப்பெருமாள் தந்தையார் இராமசாமி அவர்களும், 17-வது வட்ட அவைத் தலைவர் ஆர். மாரிமுத்து அவர்களின் தந்தையார் இராமசாமி அவர்களும் இயற்கையெய்தமைக்காக இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

செப்டம்பர் 17-ம் நாள் அறிஞர் அண்ணா அவர்களின் 59-வது பிறந்த நாள் விழாவைச் சிறப்பாக நகரில் நடத்துவது எனவும், ஒவ்வொரு வட்டத்திலும் கொடியேற்றி வைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

கரூர் நகரில் சப்-கோர்ட்டு இல்லாததால், கரூர் நகரம் மற்றும் கரூர் வட்டத்தில் உள்ளவர்கள் திருச்சியில் உள்ள சப்-கோர்ட்டில்தான் வழக்காட வேண்டியுள்ளது; இதனால் ஏராளமான பொருட் செலவும், கால விரயமும் ஏற்படுகிறது; ஆகவே, கரூர் நகரில் ஒரு சப்-கோர்ட்டு ஏற்படுத்தித் தருமாறும், பழுதடைந்துள்ள கரூர் முன்சீப் கோர்ட்டையும் விரைவில் கட்டிக்கொடுக்குமாறும் தமிழக அரசை கேட்டுக்கொள்ளப்பட்டது.

பள்ளிகளில் உண்டியல் வைக்கலாம்

கல்வி அமைச்சரின் அரிய யோசனை

கடலூர், செப். 10—

"கோயில்களில் உண்டியல் வைத்திருப்பதுபோல், பள்ளிகளிலும் உண்டியல் வைத்து, அதில் சேரும் பணத்தை பள்ளி மதிய உணவுக்கும், பிறவகைச் செலவுகட்கும் பயன்படுத்திக்கொள்ளலாம்"

என்ற அரிய யோசனையை, கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

இங்கு, மகளிர் உயர்நிலைப் பள்ளிக்கான கட்டிடக் கால்கோள் விழாவில் கலந்துகொண்டுஅமைச்சர் பேசுகையில், கோயில்களின் மிகுதியான (உபரி) வருவாயைக் கல்விக்காகப்பயன்படுத்திக்கொள்ளலாமா என்பது பற்றி அரசு ஆராய்ந்து வருவதாகவும் அறிவித்தார்.

'சமயம் மனிதனுக்குச் சரியான வழிகாட்ட வேண்டும்'

'மதத்தில் படிந்துள்ள மாசுகளை போக்குவோம்'

இந்து மதாபிமான சங்கப் பொன் விழாவில் அறிஞர் அண்ணா வலியுறுத்தல்

காரைக்குடி, செப். 9—

"சமயம் என்பது மனிதனின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கக் கூடியதாயிருக்க வேண்டும். அவனுக்கு அது சரியான பாதையைக் காட்டவேண்டும்.

"மக்களில் ஒரு பகுதியினரைத் தீண்டத்தகாதவர்களாய்க் கருதி, சமூக ஏற்றத்தாழ்வைக் கற்பிக்கும் ஒரு மதத்தை யாரும் ஏற்கமுடியாது"

என்று, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், இங்கு 'இந்து மதாபிமான சங்க'த்தின் பொன் விழாக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு, துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்த விழாவுக்கு திரு. கருமுத்து தியாகராசன் அவர்கள் தலைமை வகித்தார்.

திருவாளர்கள் இராய. சொக்கலிங்கம் வரவேற்புரையாற்றினர்.

திரு. பி. எல். நாச்சியப்பன் அறிக்கை வாசித்தார்.

திரு. சா. கணேசன் சொற்பொழிவாற்றினர்.

அண்ணா அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"பண்டை இலக்கியங்களை அனைவரும் ஏற்கத்தக்கவையாய்ச் செய்ய வேண்டுமானால், அவற்றை இங்கும் அங்குமாகச் சில இடங்களில் தூய்மைப் படுத்தவேண்டும்.

"பண்டைத் தமிழ் மக்களின் சமயக் கோட்பாடுகளையும், பிற பழக்க வழக்கங்களையும் பற்றி அந்த நூல்களிலிருந்து நாம் தெரிந்துகொள்ள முடியும். அந்தப் பழக்க வழக்கங்களிலும் சில சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன. அத்தகைய சீர்திருத்தத்திலேயே நான் சேர்ந்துள்ள கட்சி ஈடுபட்டுள்ளது.

"இராமகிருஷ்ணர், விவேகானந்தர், நேரு போன்றவர்கள் மாபெரும் சீர்திருத்தவாதிகள் ஆவர். அவர்களுடைய சீர்திருத்தப் பணிகளால் மதத்துக்குப் பெருந்தீங்கு எதுவும் ஏற்பட்டுவிடவில்லை. எனவே, சீர்திருத்தப் பணிகண்டு சமயவாதிகள் அஞ்சத் தேவையில்லை."

"மக்களை 'சாதி' என்றும், 'கோத்திரம்' என்றும் பிரிக்கும் தன்மையில் மதம் இருந்தால், அதற்கு என்னைவிடப் பகைவன் வேறு யாரும் இருக்க முடியாது.

"நம் சமுதாயம் உலகில் தொன்மையும் தூய்மையும் உடையது. ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே மொழி; இலக்கணம், இலக்கியம் இவற்றில் சிறந்து விளங்கியது நம்நாடு; எனவே இந்த சமுதாயத்துக்கு வலிமையுண்டு.

"ஈராயிரம் ஆண்டுகளாக மதத்தில் மாசு இருந்து வருகிறது. பழங்காலக் கருத்துக்கள் அடிப்படையில் உள்ள வேறுபாடுகள், சடங்குகள் இவைகளைத் திருத்தி அமைத்தாலொழிய மதத்தின் தன்மையை நாம் அனுபவிக்க முடியாது. அன்று இருந்த சமுதாயம் இன்றைய உலகத்தோடு ஒட்டவில்லை!

"மென்மையாகவும், அழகாகவும் துவக்கத்தில் இருக்கும் மெத்தை தலையணைகள், நாளடைவில் மென்மை குறைந்து, அவற்றின் இடுக்குகளில் தேள் குஞ்சுகள் இருக்கும்; அப்போது படுக்கையை உதறிப் போடுவதுபோல், நாம் மதத்தில் படிந்துவிட்ட மாசுகளைப் போக்க வேண்டும்!

"மதத்தில் உள்ள அழுக்குகளை அகற்றும் பணிக்கு என்னை நான் ஒப்படைத்து வருகிறேன்.

"சமுதாயத் துப்புரவு இல்லாத இடம் இல்லை. இதிகாசம், புராணம், தமிழ் மறைகள் இவற்றிலெல்லாம் படிப்படியாகத் தொடர்ந்து துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. கடவுள் நெறியில்கூட துப்புரவு நடைபெறுகிறது.

"நான் மதத்திற்கு அப்பாற்பட்டவனல்லன்; மதத்தின் பரிசோதகனாக என்னைக் கருதிக் கொள்ளலாம். மதத்திலுள்ள மாசுகளைப் போக்க நாம் முனைதல் வேண்டும்."

மின் கழக ஊழியர் பிரச்சினையில் அரசு காட்டும் அக்கறை

முதலமைச்சர் அறிஞர் அண்ணா, தொழிலமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, செப். 10—

"மின்சார உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு மன நிறைவு ஏற்படும்படிச் செய்ய வேண்டியதன் அவசியத்தை நான் எணர்ந்திருக்கிறேன்; எனவே, அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றக் கூடுமானவரை முழு அளவுக்கு ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறேன்; ஆனால், இதைவிட முன்னுரிமை பெறக்கூடிய பல பிரச்சினைகள் இருப்பதால், இக் கோரிக்கைகள் உடனடியாகக் கவனிக்கப்படும் என்று உறுதி கூற முடியாத நிலையில் இருக்கிறேன்.

"சிக்கன முறையைக் கையாண்டு மின்சார நிறுவனங்கள் வருவாயை இழக்காமல், அவற்றை எப்படி நிறைவேற்றலாம் என்று ஊழியர்களே யோசனை தெரிவிக்கலாம்"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், மின் கழகக் கணக்காயர் சங்க மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இரா. நெடுஞ்செழியன்

மின்சாரத் துறை அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"மின்சார ஊழியர்களின் பல்வேறு பிரச்சினைகள் குறித்து அவர்களுடன் நேரடியாகவே பேச்சு நடத்த அரசு விரும்புகிறது.

"ஊழியர்கட்கும்—மின் கழகத்துக்குமிடையிலுள்ள உயர்நீதிமன்ற வழக்கைத் திரும்பப்பெற அரசு முடிவு செய்திருப்பதே இதற்கு ஓர் அடையாளமாகும்."

மொரார்ஜி போக்கால்..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ளில் மிகுந்த அக்கறைகொண்டிருக்கும் மத்திய அரசைத் தடுக்காமல் விட்டு விட்டால், அடுத்த கணமே இந்தி பேசாத அத்தனை மாநிலங்களும் எவ்விதத் தொல்லைகளை அனுபவிக்க வேண்டியிருக்கும் என்பதை அது நன்றாக உணர்ந்திருக்கிறது.

"அண்மையில் மொரார்ஜி தேசாய் தெரிவித்துள்ள கருத்துக்களும், அச்சுறுத்தல்களும் தமிழகத்திலுள்ள மாணவர்களிடையே பெருத்த கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளன. 'இந்தி பேசாத மக்களின் உரிமையைக் கெடுக்கும் எதுவும் செய்யப்படக்கூடாது; ஆட்சி மட்டத்திலேயே நீதியைப் பெற முயற்சிக்கப்படும்' என்று முதலமைச்சர் அண்ணாதுரையும் அவரது தோழர்களும் கூறிவருவதினால்தான் அவர்கள் தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்."

—'டெக்கான் ஹெரால்டு' 7—9—67

அவையல்ல நாட்டின் செல்வங்கள்!

"ஒரு நாட்டின் நிலையான செல்வம், அந்த நாட்டில் ஓங்கி எழுந்துள்ள கட்டிடங்கள் அல்ல—அவை இடிந்துவிடக்கூடியவை! இயற்கை வளமும் அல்ல—அதுவும் அழிந்துபடும்! அரசியல் வாதிகளுமல்லர்—அவர்களும் மாறிவிடக்கூடியவர்கள்!

"பொறியியல் வல்லாரும், மருத்துவ நிபுணர்களும், வேளாண்மைத் துறை விற்பன்னர்களும், கல்வியறிவாளர்களும்தாம் நாட்டின் உண்மையான செல்வங்கள்! ஆகவே, கல்விக்காகத் தமிழக அரசு பெருமளவுக்கு உதவி செய்யும்!"

—அறிஞர் அண்ணா

(கடலூர் மகளிர் கல்லூரிக் கட்டிடக் கால்கோள் விழாவில்)

நன்றி அறிவிப்பு

"நான் மருத்துவமனையில் இருந்தபோது என்னைச் சந்தித்து ஆறுதல் அளித்த அமைச்சர்களுக்கும், கழகத் தோழர்களுக்கும் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்"

என்று, திரு. டி. கே. சீனிவாசன் அறிவிக்கிறார்.

சென்னை 78-வது வட்ட தி. மு. கழகம்

கழகத் தோழர்களுக்கு அறிவிப்பு

4—9—67 அன்று 'அன்பக'த்தில் அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் அவர்கள் தலைமையிலும்—மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் முன்னிலையிலும் நடைபெற்ற 78-வது வட்ட தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டத்தில், கீழ்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன :—

78-வது வட்டக் கிளையின் உட்கிளைகளாகவும் முத்தையா முதலித் தோட்டத்தைச் சார்ந்தவையுமான வள்ளுவர் மன்றம், இரண்டு எம். ஜி. ஆர். மன்றங்கள் ஆகியவை, தத்தமது நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டு, கழகத் தேர்தல்கள் வரையில் எந்தவிதச் செயல்களிலும் ஈடுபடக்கூடாது என்றும், அவைகளின் உடைமைகளைச் சம்பந்தப்பட்ட தோழர்கள் மாவட்டச் செயலாளரின் பொறுப்பில் ஒப்படைக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்படுகிறது.

கழகத்தின் பொதுத் தேர்தல்கள்வரை 78-வது வட்ட தி.மு.க. கிளை, மாவட்டச் செயலாளரின் நேரடித் தொடர்பில் இயங்கும். மாவட்டச் செயலாளரோ அல்லது அவரால் நியமிக்கப்படும் பொறுப்பாளரோ கிளைக் கழகத்தை நடத்திச் செல்வார்.

மேற்கண்ட முடிவுகள், 78-வது வட்ட தி. மு. க. கிளைக்கும், சம்பந்தப்பட்ட மூன்று துணை அமைப்புகளுக்கும் தெரிவித்துக் கொள்ளப்படுவதுடன், நிலையான பொறுப்பாளர் நியமிக்கப் படும்வரையில் 78-வது வட்டக் கழகப் பணிகளைப் பொறுத்து, 'நீலநாராயணன், 'அன்பகம்', சென்னை-18' என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளுமாறு கிளையின் தோழர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சுடச்சுட!

பின் தூங்கி முன் எழும் பத்திரிகை!

"மாநகராட்சி தி. மு. க. நிர்வாகத்தை எதிர்த்து 12 ஆயிரம் பாட்டாளித் தோழர்கள் போர்க் கொடி உயர்த்துகின்றனர்!

"இன்று முதலே வேலை நிறுத்தம் தொடங்கியது!"

—மாலையில் வெளிவரும் காங்கிரசுத் துண்டு நாளேட்டின் 11—9—67 செய்தி.

"மாநகராட்சி ஊழியர் வேலை நிறுத்தம் ஒத்திவைப்பு. ஏற்கனவே அறிவித்தபடி இன்று வேலைநிறுத்தம் கிடையாது. மாநகராட்சி ஊழியர் தலைவர், இதை, பத்திரிகைக்கு அறிவித்தார்.

—11-9-67 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' காலைப் பதிப்புச் செய்தி.

கழக நிர்வாகத்தில் உள்ள சென்னை மாநகராட்சியில், 'ஊழியர் வேலைநிறுத்தம் நடைபெற வேண்டும்' என்று எதிர்பார்த்து, பேனாவை மட்டும் திறந்து வைத்துக்கொண்டு உறங்கிவிட்ட தனால் வந்த தவறு இது!

திங்களன்று காலை இதழ்களிலேயே, ஊழியர் வேலைநிறுத்தம் இன்று கிடையாது' என்று செய்தி வந்துவிட்டது!

காங்கிரசுக் கட்சியின் மாலைப் பத்திரிகை என்ன செய்திருக்க வேண்டும்? 'இன்று வேலைநிறுத்தம் நடைபெறவில்லை' என்ற செய்தியை—வயிற்றெரிச்சல் காரணமாகப் பெரிதாகப் போட மனம் இல்லையெனறுலும்—எங்காவது ஒரு மூலையிலாவது போட்டு நிறுத்திக் கொண்டிருக்கலாம்!

ஆனால், அன்றையத்தினமே வந்திருக்கும் செய்தி ஒன்றின் மற்றொரு தலைப்பு இது :—

'மீதமுள்ள நாலரை ஆண்டுகள் என்னசெய்ய உத்தேசம்?

—தி. மு. க.-வுக்கு தலைவர் காமராசர் கேள்வி!

இதில் மட்டும் விழித்துக் கொண்டது! அதில் மட்டும் தூங்கி விட்டது!

எடுத்துக்காட்டான மனைவியைப்பற்றி, 'பின் தூங்கி முன் எழும் பேதை' என்று தமிழ் இலக்கியம் கூறுவதாகச் சொல்லுவார்கள்!

இப்படி 'எடுத்தக்காட்டான முறை'யில் செய்திகளை வெளியிடும் அந்த நாளிதழை, 'யின் தூங்கி முன் எழும் பத்திரிகை' என்று அழைத்தாலென்ன?

—'பாக்சர்'

ஸ்ரீ ஜோதி வேஸ்ட் பேப்பர் கம்பெனி
21, அண்ணுபிள்ளை தெரு, சென்னை-1.
தின, வார, மாத வாசித்த பத்திரிகைகளை நியாய விலைக்கு வாங்கி, மலிவான விலைக்கு விற்பனை செய்கிறோம்.

தயாராகிறது!
'திருவிளக்கு'
அண்ணு மலர்
★ சங்க முத்தமிழுடையார்—
★ சமுத்திரப் படையுடையார்—
★ நமது மன்னராம் பேரறிஞர் அண்ணு!
★ அந்த ஒளி உதித்த நாள் செப்டம்பர் 15!
★ அந்நாளில் அண்ணனின் பொன்னடிக்கு திருவிளக்கு படைத்திடும் காணிக்கை ....
'அண்ணு மலர்'
★ மலை தலை சாய்வதில்லை! அலைகடல் ஓய்வதில்லை!
★ அறிவேடாம் 'திருவிளக்'கின் தரம் என்றும் அப்படியே!
★
விலையோ ரூ. 1-தான்!
இன்றே பதிவு செய்துகொள்ளுங்கள்.
தனி மலர் வேண்டுவோர் ரூ. 1 அனுப்புக!
'திருவிளக்கு'—2/142, மவுண்ட் ரோடு—சென்னை-6.

கசக்கும் இந்திக்கு இனிக்கும் சர்க்கரையா?

மாநிலங்களுக்கான அளவைக் கூட்டித் தருகிறது மத்திய அரசு?

வழக்கமாகக் கொடுத்துவரும் அளவோடு மேற்கொண்டு ஓர் இருபது சதவிகித மடங்கினை இம்மாத சர்க்கரைக் கோட்டாவுடன் சேர்த்துத் தருகிறது மத்திய அரசு!

"வருகிற பண்டிகை தினங்களுக்கான கூடுதல் தேவைகளை இதன் மூலம் மாநிலங்கள் சமாளிக்க முடியும்" என்று புதுடில்லி நம்புகிறது.

அண்ணு பிறந்த நாளில் 59 மாணவர்கள் ஏந்திவரும் தீச்சுடர்

முத்துப்பேட்டையிலிருந்து சென்னைக்குப் புறப்பாடு

"தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அறிஞர் அண்ணு அவர்களின் 59-வது பிறந்தநாள் விழாவையொட்டி தஞ்சை மாவட்ட மாணவர்கள் 59-பேர், 'அண்ணு சுடர்', ஏந்தி அடியிற்கண்ட வழிகளிலும் ஓட்டமாக ஓடிச் சென்று சென்னையில் அறிஞர் அண்ணு அவர்களிடம் சேர்ப்பிப்பர். வழிநெடுகிலும் கழகத் தோர்கள் தொடர் ஓட்டத்தில் வருபவர்களை ஊக்குவிக்கும் வகையில் விளம்பர ஏற்பாடுகளைச் செய்து அண்ணுவின் புகழ் சிறக்க உதவ வேண்டுகிறோம்"

என்று அண்ணு சுடர்க் குழுவினர் (திருத்துறைப்பூண்டி) அறிவிக்கின்றனர்.

முத்துப்பேட்டையிலிருந்து 14—9—67 காலை 8-மணிக்குப் புறப்பட்டு திருத்துறைப்பூண்டி—திருவாரூர் — மாயவரம்—சீர்காழி—சிதம்பரம்—கடலூர்—பாண்டிச்சேரி—மதுராந்தகம் — செங்கற்பட்டு வழியாக 15—9—67 இரவு சென்னை சென்றடையும்.

க. அன்பழகன்

சுற்றுப்பயணம்

செப். 13 மாலை: கடலூர்; 14 காலை: வெண்ணத்தூர் (இராசிபுரம்); மாலை: நல்லிபாளையம் (நாமக்கல் தொகுதி); இரவு; பரமத்தி—பொதுக்கூட்டம்.

செப். 15 காலை: வாங்கல்—உயர்நிலைப் பள்ளி மாணவர் இலக்கிய மன்றம்; பிற்பகல் 2 மணி: நகராட்சி உயர்நிலைப் பள்ளி மாணவர் இலக்கிய மன்றம்: மாலை 3-30 மணி: பெண்கள் உயர்நிலைப் பள்ளி இலக்கிய மன்றம்; மாலை 5-30 மணி: பொதுக்கூட்டம்; இரவு 8-30 மணி: கரூர் 11-வது வட்டப் பொதுக்கூட்டம்.

செப். 16 மாலை 6 மணி: வேலாயுதம்பாளையம் உயர் நிலைப் பள்ளி: மாலை 5 மணி: புலியூர் —பொதுக்கூட்டம்; இரவு 7 மணி: மண்மங்கலம்—பொதுக்கூட்டம்; இரவு 9 மணி: செம்படபாளையம்--பொதுக்கூட்டம்.

டாக்சிகள் அனுமதி

மாநிலம் முழுமைக்கும் வழங்கப்படும்

இனிமேல் வழங்கப்படும் டாக்சி பெர்மிட்டுகள், மாநிலம் முழுவதற்கும் செல்லுபடியாகும் என்று அரசு அறிவித்திருப்பதால், சென்னை நகரம், செங்கற்பட்டு மாவட்டம் ஆகியவற்றுக்குள்ளாக அல்லது நகராட்சிகளுக்குள்ளாக ஓடும் டாக்சிகளுக்கு அளிக்கப்படும் வரிச் சலுகை, 1967 அக்டோபர் 1-ம் நாளிலிருந்து திரும்பப் பெறப்படும்.

இனி எல்லா டாக்சிகளும் காலாண்டுக்கு ரூ. 75 வரி கட்ட வேண்டும்.

அண்ணுவைப் பற்றிக் கவியரங்கம்

கருணாநிதி தலைமையில் நடைபெறும்

சென்னை, செப். 9—

அறிஞர் அண்ணு பிறந்த நாள் விழாவையொட்டி செப்டம்பர் 17-ம் நாளன்று அமைச்சர் மு. கருணாநிதி தலைமையில் சென்னையில் கவியரங்கம் நடைபெறும்.

தமிழ்நாட்டின் புகழ்பெற்ற கவிஞர்களான முடியரசன், 'தாய்மொழிக் காவலர்' என்ற தலைப்பிலும்; வாணிதாசன், 'நாடக ஆசிரியர் அண்ணு' என்ற தலைப்பிலும்; கவிஞர் ஆனந்தம், 'தலைவர் அண்ணு' என்ற தலைப்பிலும்; வேழவேந்தன், 'அண்ணு ஒரு தாய்' என்ற தலைப்பிலும்; நாவுக்கரசன், 'எழுத்தாளர் அண்ணு' என்ற தலைப்பிலும்; அப்துல் ரகுமான், 'முதலமைச்சர் அண்ணு' என்ற தலைப்பிலும்; மணிமுடிச்சோழன், 'அரசியல்வாதி அண்ணு' என்ற தலைப்பிலும்; தமிழ்ப்பித்தன், 'தத்துவமேதை அண்ணு' என்ற தலைப்பிலும்; முத்துலிங்கம், 'நடிகர் அண்ணு' என்ற தலைப்பிலும் பாடுவர்.

வரவேற்பாளராக வழக்கறிஞர் வேலூர் நாராயணன் பணியாற்றுகிறார்.

சென்னை கடற்கரையில் கண்ணகி சிலை!

கல்வி அமைச்சர் முயற்சி

மதுரை, செப். 9—

"கண்ணகி சிலை ஒன்றை சென்னைக் கடற்கரையில் வைக்க முயற்சி செய்துகொண்டிருக்கிறேன்; உலகத் தமிழ் மாநாடு நடைபெறும்போது அந்தச் சிலை திறக்கப்பட வேண்டும்; இதற்கான நிதியைத் தனிப்பட்டவர்களிடமிருந்து பெற முடியும் என்றாலும், அதனை ஆசிரிய—மாணவர்கள் அமைக்கவேண்டும் என்று கூறியிருக்கிறேன்; தமிழகத்தின் இலக்கியச் சிறப்பைப் பறைசாற்றும் வகையில் இந்த சிலையை அமைக்க வேண்டும்"

என்று, கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், மதுரை தமுக்கம் கலையரங்கில் நடந்த ஆசிரியர்கள் நாள் விழாவில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

புது மனை புகுவிழா

சென்னை—இராயபுரம் சூரிய நாராயண செட்டி தெரு, சொக்கலிங்க கிராமணி தோட்டத்தில் கட்டப்பட்டுள்ள தோழர் என். எஸ். இராசு அவர்களின் புது மனை புகு விழா, 13—9—67 காலை 9-மணிக்கு திரு. மு. வேதாசலம் எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில் நடைபெறும்; பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் திறந்துவைப்பார்கள்.

சிங்கப்பூர் தி.மு.க.

அமைச்சர் மாதவன் விளக்கம்

சென்னை, செப். 11—

"தமிழ் நாட்டில் உள்ள தி. மு. கழகத்துக்கும் — சிங்கப்பூரில் உள்ள தி. மு. கழகத்திற்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை; பெயர்தான் இரண்டும் ஒன்ருக இருக்கிறது,

"சிங்கப்பூரில் உள்ள தி. மு. கழகத்திடமிருந்து நாங்கள் எந்த உதவியும் பெறவில்லை; இங்குள்ள தி. மு. கழகமும் அந்தத் தி. மு. கழகத்துக்கு எதுவும் கொடுக்கவுமில்லை"

என்று அமைச்சர் செ. மாதவன், இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"பல ஆண்டுகட்கு முன்பே இந்தப் பெயரில் மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் அமைப்புகள் துவங்கப்பட்டன; அவைதான் இன்னும் நீடித்து இருந்து வருகின்றன.

"சிங்கப்பூரில் வாழும் தமிழர்கள், அந்த நாட்டிடம் விசுவாசத்துடன் நடந்துகொள்வார்கள் என்பதில் ஐயமில்லை" என்று அவர் மேலும் கூறினர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.